

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், சேரம்பாடி சுங்கம் பகுதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.15.40 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 25.09.2024 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு உட்பட பலர் உள்ளனர்.

### கழக இளைஞர் அணி செயலாளர்

# அமைச்சர் உதயநிதிஸ்டாலின் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை!

## திருவாடுதுறையில் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் வரவேற்பு!

மயிலாடுதுறை., செப். 28 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் மணல்மேட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு கலைஞர் திருவுருவச் சிலை திறப்பு விழா மற்றும் குத்தாலம் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் கோசி. மணி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிக்கு இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் கும்பகோணத்தில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மயிலாடுதுறை மாவட்டம் வருகை தந்தார். மயிலாடுதுறை மாவட்ட எல்லையான திருவாடுதுறையில் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் 4,000த்திற்கும் மேற்பட்டவர்கள் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தலைமையில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து குத்தாலம் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கோ.சி.மணி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மணல்மேடு கலைஞர் படிப்பகத்தில் கலைஞருக்கு 8 அடி உயர வெண்கல சிலையை திறந்து வைத்தார்.இந்த நிகழ்ச்சிகளில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி, மயிலாடுதுறை மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சருமான சிவ. வீ.மெய்யநாதன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என். இளையராஜா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள் செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரபாண்டியன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி.என். விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி. என்.ரவி, மாவட்டக் கழக அவைத் தலைவர் கே. ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்ல.சேது ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், ஞான.இமையநாதன், ப.முருகமணி, மூவலூர் மூர்த்தி, பி.எம். அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர். ராஜா, ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்ப ராயன்,

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், அ.காந்தி, எஸ்.சங்கரநாராயணன், எஸ்.சுவாமிநாதன், ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், எஸ்.வெற்றிவேல், ஹர்சத், பி.கென்னடி, சுபா நெடுஞ்செழியன், பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், முத்துராஜா, அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் மருது, தேசப்பன், வி.செளமியன், இரா.மனோகரன், வெடி பாலமுருகன், இரா. முருகப்பா, வி.எஸ்.என். செந்தில், பெரு.வீரமணி, எஸ்.ராஜ்குமார், எஸ்.எம். சம்சுதீன், இரா.முருகன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், எஸ். பாலாஜி, காழி கலைவாணன், எம்.எஸ்.முத்துக்குமரன், இரா.செல்வராஜ்,க. அறிவுச் செல்வன், தீபாசந்தியேந்திரன், கே.விக்னேஷ், வி.எஸ்.பிரபாகரன், மா. வைத்திய நாதன், இரா. தன்ராஜ், மாவட்ட இளைஞர் அணி துணைச் அமைப்பாளர்கள் எம்.எஸ்.விஜய், ஜெ. ஜுபையர்அமது, எஸ்.ஆனந்தன், கே.வினோத்பாண்டியன், கோசி.மதி. திருமாவளவன், செள.சர்வோதயன், ஒன்றியக் குழு தலைவர் ஜெயபிரகாஷ், காமாட்சிமூர்த்தி, மகேந்திரன், நந்தினிஸ்ரீதர், கமல ஜோதிதேவேந்திரன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரி ராஜசேகர், பேரூராட்சி தலைவர்கள் கண்மணிஅறிவழ கன், பூங்கொடிஅ லெக்சாண்டர், சங்கீதாமாரியப்பன், சுகுணாசங்கரி குமர வேல் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் 4000த் திற்கும் மேற்பட்டவர்கள் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு மேள, தாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கும்,

# கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும் (BLC) வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டுதமிழகத்திலுள்ளவாக்காளர்பட்டியல்கள்திருத்தம்செய்திடபுகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7-லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8-லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்-6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்-6ன் கலம் IV-ல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024
2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை
3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்
4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2 க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்

# வீரபாண்டி ஆ.இராஜா மூன்றாம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் வேண்டுகோள்!

சேலம், செப்.28-

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நமது நெஞ்சங்களில் நிறைந்து, வாழ்ந்த வீரபாண்டி சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளராகவும், சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளராகவும், தேர்தல் பணிக்குழுச் செயலாளராகவும், கழகத் தோழர்களுடன் கரம் கோர்த்து கழகம் வளர்க்க பாடுபட்ட சகோதரர் வீரபாண்டி.ஆ.இராஜா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவுநாள் வருகின்ற 02.10.2024 புதன்கிழமை அன்று காலை 8.00 மணியளவில் பூலாவரியில் உள்ள அவருடைய நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழகத் தோழர்களும், அவர் மீது பற்றும், பாசமும் கொண்ட பொதுமக்களும் திரளாக பங்கேற்று மறைந்த சகோதரர் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்த்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### காஞ்சிபுரத்தில் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் !

# நாகை மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வேண்டுகோள்!



நாகை, செப். 28 -

காஞ்சிபுரத்தில் தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம். நாகை மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வோம் என நாகை மாவட்டச்செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு இன்று (28.09.2024 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள். நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதி நிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

### கோவை பேரூரில் சாந்தலிங்க அடிகளார் மடத்தில் - பேரூர் ஆதீனம்

# மருதாசல அடிகளாருக்கு - கலைஞர் 100 ரூபாய் நாணயம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

கோவை, செப். 28 -

கோவை பேரூரில் சாந்தலிங்க அடிகளார் மடத்தில் பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளார் அவர்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா 100 ரூபாய் நாணயத்தை அவரிடம் வழங்கினார்.

உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் முகம்மது ரபீக், பேரூர் பேரூராட்சி தலைவர் அண்ணாதுரை, ரங்கசாமி, கோட்டை செல்லப்பா, வழக்கறிஞர் இஸ்மாயில், டோனிசிங் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான்,

பேரூர் ஆதினம் மருதாச்சல அடிகளார் அவர்களின் இந்த மடம் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகவும், செம்மொழி நடத்துவதற்கு உறுதுணையாக இருந்ததாக தெரிவித்தார்.

மேலும் முதல்வர் அவர்கள் சந்தித்தபோது, கோவைக்கு செல்கிறேன், பேரூர் ஆதீனத்தை மரியாதை நிமித்தமாக சந்தித்து கலைஞர் நூற்றாண்டு நாணயத்தை அளிக்க உள்ளேன் என சொன்னேன். அவர் சார்பாகவும் வாழ்த்து சொன்னார்.

ஒட்டுமொத்த தமிழ் உணர்வோடு இருக்கக் கூடிய அனைவரையும் ஒருங்கிணைப்பது தான் தமிழர் கலாச்சாரம். தமிழோடு இருக்கக்கூடிய பேரூர் ஆதீனம் இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

ஒன்றிய அரசு கொண்டு வரும் வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதாவை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வருகிறோம். ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமும் அதேபோல் ஜமாத்தின் ஒருமித்த கருத்தும் இந்த வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதாவிற்கு எதிராக உள்ளது. மத நல்லிணக்கத்திற்கு வேற்றுமையில் ஒற்றுமை காணும் வேளையில் ஒன்றிய அரசு இந்த சட்டம் மூலம் ஒற்றுமையில் வேற்றுமையை காண வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. இது கவலை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதல்வர் ஆகப் போகிறார் என்ற செய்திக்கு பதிலளித்த செஞ்சி மஸ்தான், கலைஞர் உரிய நேரத்தில் உள்ளாட்சித் துறையயும், துணை முதல்வர் பதவியையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கினார். குறிப்பாக உழைப்பு .. உழைப்பு .. உழைப்பு... என்றால் அது ஸ்டாலின் தான் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்.

அதேபோல் அந்த உழைப்பிற்கு எடுத்துக்காட்டாக ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்தின் செல்லபிள்ளை கலைஞரின் பேரப்பிள்ளை.

உதயநிதி ஸ்டாலின் அவர்களும் இன்று தமிழகம் முழுவதும் இளைஞர்களை ஒன்று சேர்த்து கழகத்தை வலுப்படுத்துவதாக தெரிவித்த அவர், அந்த உழைப்புக்கு ஏற்றவாறு உரிய நேரத்தில் கலைஞர் அவர்களை போல முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் உதயநிதிக்கு துணை முதல்வர் பொறுப்பு கொடுப்பார் எனவும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்டம் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வக்ஃப் நிறுவனங்களுக்கு பெருமராமத்துபணிக்காக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் 33 லட்சத்திற்கானகாசோலையை வழங்கினார். அருகில் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத் மஸ்ஜித் பாபு ஆகியோர் உள்ளனர்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் தளி அள்ளி ஊராட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாளையொட்டி 71 அடி உயரகொடி கம்பத்தில் இரு வண்ணக் கொடியினை ஏற்றி சிறப்புரையாற்றி 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் வழங்கினார். நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் தடரஅள்ளி நாகராஜ் தலைமை தாங்கினார். கிழக்கு ஒன்றிய செயலாளர் க.மகேந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.